# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.
## O.S. No.12/2020

2022 ம் ஆண்டுஅக்டோபர் மாதம் 27 ம் நாள் வாதி தரப்பு 1 வது சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின்ஏற்பாட்டின்படி திரு.A.S.அமீர்தீன், B.A.,B.L.,LLM,D.JJJ.Psy, மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ) அவர்களால் கூறப்பட்டு உறுதிகூறப்படுகிறது.

**<u>தேதி 27.10.2022</u>**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : மோகன் | | ஜாதி | : |
| த/பெயர் | : | | மதம் | : |
| கிராமம் | : | | தொழில் | : |
| வட்டம் | : | | வயது | : |

மேற்படி வாதிதரப்பில் 1 வது சாட்சியான மோகன் கடந்த 26.082022 ம் தேதி முதல் விசாரணை செய்யப்பட்டு வந்த சூழ்நிலையில் மேற்படி வாதி தரப்பில் வழக்கிற்கு முக்கியமான ஆவணங்களை தாக்கல்செய்ய வேண்டியிருப்பதால் மேற்படி முதல் விசாரணை முற்றிலும் முடிக்கப்படாமல் நிலுவையில் இருந்துவந்த சூழ்நிலையில் இன்று மேற்படி வாதி தரப்பி 1 வது சாட்சி ஆஜர் . கீழ்க்கண்ட ஆவணம் குறியீடு செய்யப்படுகிறது.

**<u>வா.சா.1 மோகன் முன்னிலை முதல் விசாரணை தொடர்ச்சி</u>**

| வ. எண். | தேதி | ஆவண விவரம் | குறியீடு செய்யப்பட்ட விவரம் | ஆட்சேபனை |
|---|---|---|---|---|
| 11 | 11.05.1995 | வாதி தாவா சொத்தை பெற்ற ஆவணம் - நகல் | வா.சா.ஆ.11 | உள்ளது. கடுமையாக ஆட்சேபனை செய்யப்படுகிறது |
| 12 | 01.02.1991 | வாதி தாவா சொத்திற்கு அருகில் உள்ள சொத்தை பெற்ற ஆவணம் | வா.சா.ஆ.12 | |

எனவே, கோர்ட்டார் அவர்கள் மேற்படி ஆவணங்களை எனது தரப்பு சங்கதிகளை பரிசீலித்து ஒரு தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்குமாறு வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

கற்றறிந்த பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வழக்கு சம்மந்தமாக ஆவணங்களை பரிசீலித்து தனது தரப்பு சாட்சிகளிடம் ஆலோசனை பெற்று சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய வேண்டியிருப்பதால் வாதியை குறுக்கு விசாரணை செய்ய வேறொரு தேதிக்கு குறுக்கு

விசாரணை செய்ய கேட்கிறார். நீதிநலன்கருதி மேற்படி கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

*(Sd/- A.S. Ameerdheen)*
District Munsif
Mannargudi.